DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 392 / 2025 |
| Prosecution Witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.1 |
| Name | : | ஜீவா |
| Father's /Husband Name | : | ஆறுமுகபாண்டியன் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 48 |
| Occupation | : | தலைமைக்காவலர் திருவாரூர் போக்குவரத்து காவல்நிலையம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 08th January, 2026 Accused present.

<u>முதல் விசாரணை</u>:–

நான் திருவாரூர் போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.05.2023–ம் தேதி நன்னிலம் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்த போது 15.00 மணிக்கு நானும், தலைமைக்காவலர் சேவியர் மற்றும் தலைமைக்காவலர் கௌசல்யா ஆகியோரும் மதுவிலக்கு தடுப்பு சம்பந்தமாக கூத்தனூர் மேலத்தெருவில் உள்ள முருகதாஸ் என்பவரது வீட்டின் பின்புறம் கண்காணித்து வந்தபோது சந்தேகம்படும்படியாக நின்றுகொண்டிருந்த முருகதாஸ், த/பெ. நடேசன் கூத்தனூர் மேலத்தெரு, நன்னிலம் என்பவரை சோதனை செய்த போது அவரிடம் 180 எம்.எல் பிடிக்கக்கூடிய Day Night Brandy 10 பாட்டில்கள் இருந்தது. மேற்படி மதுபாட்டில்களை வைத்திருக்க அவரிடம் எவ்வித அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாததால் அவரை காரணம் கூறி கைது செய்து தலைமைக்காவலர் சேவியர் எங்கள் முன்னிலையில் 15.10 மணிக்கு அவரிடமிருந்த பாட்டில்களை கைப்பற்றி அந்த இடத்திலேயே கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். தனிநபர் சாட்சிகள் யாரும் சாட்சியாக வர முன்வராத காரணத்தினால் மேற்கண்ட கைப்பற்றுதல் மகஜரில் நானும், கௌசல்யா என்பவரும் சாட்சியாக செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு, 15.20 மணிக்கு

தலைமைக்காவலர், ஆய்வாளர் உத்தரவுப்படி கைப்பற்றப்பட்ட 10 பாட்டில்களை சம்பவ இடத்திலேயே பிரிவு 32 TNP Act ன் கீழ் கொட்டி அழித்து மகஜர் தயார் செய்தார். அந்த அழிப்பு மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த அழிப்பு மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், பின்னர் எதிரியுடன் காவல் நிலையம் வந்து தலைமைக்காவலர் எதிரி முருகதாஸ் என்பவர் மீது குற்ற எண்.340/2023 சட்டப்பிரிவுகள் 4 (1) (a) Tamil Nadu Prohibition Amendment Act 2024 – மீது வழக்கு பதிவு செய்தார். மேற்படி வழக்கில் புலன் விசாரணைக்கு அவருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக தலைமைக்காவலர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2026.01.08 11:56:19 +0530